**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**
**Uni5 பக்த விஜயம் - 72. ஸ்ரீதுளசி தாஸ் கோஸ்வாமி**

---

ஊர்: காசி

இல்லறம் செய்த ஊர்கள்: ராஜ்பூர் மற்றும் டில்லி

காலம்: அக்பர் பாதுஷா வாழ்ந்து வடதேசத்தை ஆண்ட அதே காலம்.

ஆத்மாராம் - இவரது அப்பா.பாதுஷாவின் ப்ரதான முக்ய மந்த்ரிகளில் ஒருவர்.

மமதா பாய் - இவரது மனைவி, குரு. பின்னர் ஹனுமான் மூலமே இவர் ராம நாம மந்த்ரோபதேசம் பெற்றார்.

உலகிற்கு இவர் அளித்த மிகப் பெரிய சேவை: வததேசத்தில் எளிய ஜனங்களும் புரிந்து கொள்ளும் வகையில் ஹிந்தியில் "**ராம சரித்ர மானஸ்**" என்ற ராமாயண காவியம்.

இவர் அருளிய ஸ்ரீஹனுமான் சாலிசா மிகவும் சக்தி கொண்ட பாராயண நூல் ஆகும்.

<u>**இவரது வாழ்க்கை மூலம் இக்கால ஜனங்கள் அறிய வேண்டியவை:**</u>

* பூர்வ ஜென்ம வாசனையை ஒவ்வொரு ஜென்மத்திலும் அனுபவிக்க வேண்டும்.தீய வாசனைகளை ஆன்மீக வாழ்வின் மூலம் திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டும்.

* வாழ்க்கையின் பயன் நம்மிடம் உள்ள ஏதாவது ஒரு திறமை மூலம் சமூஹ மேம்பாட்டிற்கு வழிசெய்தல் ஆகும்.

* யாருக்கும் எப்படியும் எதன் மூலமும் எவர் மூலமும் மாற்றம் வரலாம்.

* குழந்தைகளின் நல்ல மாற்றங்களுக்குப் பெற்றோரின், வாழ்க்கைத் துணையின் இடைவிடாத ப்ரார்த்தனை மிகவும் வலு சேர்க்கும்.

* மிகவும் தாழ்ந்த குணங்கள் கொண்டவரும் நல்ல மாற்றத்தின் மூலம் தன்னுள்

இருக்கும் சத்யத்தைத் தான் விரும்பும் தெய்வீக வடிவில் காண முடியும்.

<u>வாழ்க்கையின் மிக முக்கிய நிகழ்வுகள்:</u>

**உடல் காமமே வாழ்க்கை**

பூர்வ ஜென்மத்தின் தொடர்பால் பெண் மோஹம் கொண்டு இளம் வயதில் காம சுகத்தில் உழன்றார்.கல்யாணம் ஆகியும் அவர் பிற பெண்களிடம் காமம் அனுபவிப்பதை விடவில்லை.ஒரு கட்டத்தில் அப்பற்றும் வெறியும் மனைவியிடம் காட்டப்பட ஊராரும், பெற்றோரும் அக்பரும் மனைவியும் இவரைத் தூற்றிப் பழிக்கும் துர்கதிக்கு ஆளானார்.

**பிணப்படகேறி மனைவியை அனுபவிக்கச் செல்லும் இச்சை**

மழைக்கால நள்ளிரவில் யமுனை ஆற்றைத் தாண்டி மனைவியை அவள் வீட்டில் சென்று கண்டு காமம் அனுபவிக்க எண்ணி ஒரு பிணத்தைப் பிடித்துக் கொண்டு ஆற்று வெள்ளத்தைக் கடக்கும் அளவுக்கு இழிநிலையில் வாழ்ந்தாராம்.

**சத்குருவான மனைவி**

இரவில் தன்னை நாடி வந்த துளசி அவர் வந்த விதம் குறித்து விசாரித்தார் மமதா பாய்.தன் கணவரின் உடல் பித்து வளர்வதால் மிகப் பெரிய கேடு நிகழும் அபாயம் உள்ளதை உணர்ந்து, ஸ்ரீராமனை மனதார வழிபட்டு மிக்க விழிப்புணர்வில் இருந்து சொல்வார், ***"அன்பாரே! இனிய கணவரே! உமது காதலும் காமம் எனக்கு மகிழ்ச்சியே! ஆனால் எப்போது வேண்டுமானாலும் அழியும் இந்த அல்ப உடம்பின் மீது வைத்த மோஹத்தில் அணுவளவாவது தெய்வத்தின் மீதும் வைக்கலாமே?!"***

தன் மனைவி மூலம் மனமாற்றம் பெற முன் ஜென்மத்தில் சங்கல்பம் செய்த தருணம் வர, துளசியின் மனம் மாற்றத்துக்குச் செல்ல முற்பட்டது.தன் இச்சை மனைவியை மகிழ்ச்சி செய்ய முடியவில்லை.ஆனால் அதையே இறைவன் ஏற்பன் என்று உணர்கிறார்.அன்று முதல் அவருள் நிதானமான மாற்றங்கள் வந்தன.

**காசிப் பயணம்**

தன் பற்றுக்களை அறுக்கும் பொருட்டு அதற்குரிய மனோபலம் தேடி அவர் காசிக்குச் சென்று, சில காலம் பல ஆன்மீகப் பெரியோரின் சத்சங்கத்தில் இருக்கிறார்.ஸ்ரீராம ஜெபத்தின் மேன்மையை உணர்ந்து அதை மேற்கொள்கிறார்.

**பெற்றோர் பெற்ற அமைதி**

தன் மகனின் உன்னத மாற்றத்தை அறிந்த ஆத்மாராம் மிக்க மகிழ்ச்சி கொண்டு சிலகாலத்தில் காசியில் வந்து தன் மகனது ஆன்மீக வாழ்க்கையைக் கண்டுகளித்தார்.அந்நிலையிலேயே அவர் இறைவனடி சேர்ந்தார்.கணவரின் இறப்பைத் தொடர்ந்து மனைவியும் கங்கையில் இறங்கி உயிர் நீத்தார்.

தன் மனைவியுடன் பெற்றோருக்கு உரிய ஈமச் சடங்குகள் செய்தார் துளசி தாஸ்.அதன் பின் காசியிலேயே வாழ ஆரம்பித்தார்.தனி ஆஸ்ரமம் அமைத்துக் கொண்டு மனைவியின் துணையுடன் சுமார் 12 வருஷங்கள் சத்சங்கம், த்யானம் என மனமாற்றம் கண்டார்.அப்போது அவருள் தான் பெற்ற அனைத்து ஆன்மீகச் செல்வங்களையும் மக்களுக்கு வாரி வழங்கும் ஆசை ஏற்பட அதைத் தன் ராமாயண காவியம் மூலம் அரங்கேற்றினார்.இவரது ஆன்மீக மாற்றங்களை அக்பர் மிக்க ஸ்ரத்தையுடன் கவனித்து வருகிறார்.

**ஸ்ரீஹனுமானின் தரிசனம்**

தன் ஆஸ்ரமத்தின் அருகில் மனசாந்தி இல்லாமல் இருந்த ஒரு ஆத்மாவின் உபாதையை இவரது ஸ்ரீராம நாம ஜெபம் தீர்த்து வைத்தது.அவ்வாத்மா இவரது விழிப்புணர்வுக்கு நன்றிக்கடனாக ஒன்றைக் கூறியது.அது என்ன?

காசியில் ஹனுமன் காட்டில் ஸ்ரீஹனுமான் நித்தம் ராமாயண ப்ரவச்சனம் கேட்க வருகிறார் என்பதே ஆகும்.விடுவாரா துளசி? தன் மனைவியின் தேகத்தின் மீது வைத்த மோஹத்தை அப்படி அவர் பாவ பக்தியாக அல்லவா மாற்றிக் கொண்டார்? இப்போது ஹனுமானைக் காண வெறி எடுத்து அலைய ஆரம்பித்தார் துளசி தாஸ்.

**இஸ்லாமிய ராமர்**

அதன்படி இவர் ஹனுமான் கட்டில் ராமாயண ப்ரவச்சனம் செய்யும் இடத்தில் சென்று தன் பாவ பக்தியாலும் நாம ஜெபத்தின் வலிமையாலும் ஹனுமானை அடையாளம் கண்டார்.அவரது அருளால் சில காலத்தில் ஒரு ஏழை இஸ்லாமியரின் வடிவில் ஸ்ரீராமனையும் தரிசனம் செய்தார்.ப்ரபஞ்சமயமாக அனைத்துமாய் இருப்பது ஸ்ரீராம ***ப்ரஹ்ம சத்யமே*** என்று அவர் தெளிகிறார் என்பதைப் புரிந்து கொள்க.

**குரு தக்ஷிணை**

தன் தூய ஜெபத்தின் வலிமையால் அவர் ஸ்ரீராமனின் முழு குடும்பத்தையும் தன் மனைவிக்கு குரு தக்ஷிணையாகக் காட்டிக் கொடுத்து நன்றி கூறினார்.ராமாயண காவியத்தை மிகவும் எளிய பாஷையில் மக்களுக்குப் பரப்ப அவர் எழுதி அதையே ஹனுமானுக்கு தக்ஷிணையாக சமர்ப்பித்தார்.

**பொருள் பற்றை ஒழித்த மஹான்**
துளசியின் ஆஸ்ரமத்தில் கூட்டம் அதிகம் வரும்.மக்கள் இவருக்கும் ஆஸ்ரமத்துக்கும் அளிக்கும் நன்கொடைகள் மிக அதிகம். அதன் மூலம் இவர் காசியில் பல தர்ம காரியங்கள் மேற்கொண்டார்.ஒரு முறை இவரது ஆஸ்ரம மாணவர்களே பொருளைத் திருடிச் செல்ல, லக்ஷ்மணன் அதைத் தடுத்துக் காத்தார்.அனைத்து பொருட்களையும் வாரி வழங்க உத்தர இட்டார்.அதையே துளசியும் செய்து அதன் மூலம் பொருள் பற்றையும் துறக்கிறார்.

**மாணவியின் துயர் தீர்த்த குருதேவ்**
தன் மாணவி ஒருத்தியின் கணவன் மிக இளம் வயதில் இறந்து போக, அவனால் உலகிற்கு ஏற்படும் நன்மைகளை விழிப்புணர்வில் உணர்ந்து தன் ராம நாம மஹிமையால் அவனுக்கு உயிர் ஈந்தார் துளசி.அவனே பிற்காலத்தில் இவரது காவியத்தைப் பல ஊர்களில் சென்று பாராயணம் செய்து ப்ரவச்சனம் செய்தான்.அவன் பெயர் அரவிந்த் சங்கர்ஜி.

**அக்பர் கண்ட வானர சேனை**
துளசி தாஸின் மகத்துவம் வடதேசத்தில் பரவக் கண்ட அக்பர் அவர் மூலம் ஸ்ரீராமனை தரிசிக்கும் ஆசையுடன் காசியில் சிலகாலம் தங்கினார்.ஆனால் அக்பரின் மனதில் பூரண நம்பிக்கை இல்லை என்று ஹனுமான் கூறினார்.ஆனால் தன் தவற்றை எல்லாம் ஒரு அப்பாவின் தன்மையில் இருந்து ஏற்றுக் கொண்ட அவருக்கு ஏதேனும் ஒரு வகையில் தரிசனம் தர வேண்டும் என்று வேண்ட, வானர சேனையை மட்டும் காட்டித் தருவதாக ஹனுமான் ஒப்புக் கொள்கிறார்.

அதன்படி ஸ்ரீராம நவமி மஹா உத்சவத்தின் போது, ஆயிரக்கணக்கான கம்பீரமான வானர வீரர்கள் அணிவகுத்து வருவதைக் கண்டு மகிழ்ந்தார் அக்பர்.

பலகாலம் ஸ்ரீஹனுமானின் பாத நீழலின் கீழ் துளசி தாஸும் மனைவியும் ஆன்மீகப் பயிற்சி செய்து பக்தியைப் பரப்பி இறையடி சேர்ந்தனர்.

ஹரி ஓம்!